# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.171/2018

**2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சுரேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர் •** | **:** | **ரமேஷ்** | **தொழில் •** | **:** | |
| **தந்தை பெயர் •** | **:** | **ராஜி நாயக்கர்** | **கிராமம்•** | **:** | |
| **வயது •** | **:** | **45** | **வட்டம்•** | **:** | **காஞ்சிபுரம்** |
| **நேரம் •** | **:** | | **•** | **:** | |

**வா.சா.1 குறுக்கு விசாரணை**

செல்லம்மாள், வரதம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் வரதம்மாள் எனது தாய், செல்லம்மாள் எனது அத்தை ஆவார். வரதம்மாள் மற்றும் செல்லம்மாள் இருவரும் நன்றாக உள்ளனரா என்றால் அவர்களால் நடக்க இயலவில்லை. எனது அம்மாவிற்கு சுமார் 70 வயதாகும் அத்தைக்கு 80 வயதாகிறது. வழக்கு தாக்கல் செய்யும்போது வரதம்மாள் மற்றும் செல்லம்மாள் நன்றாக இருந்தனரா என்றால் நன்றாக இருந்தார்கள். அவர்கள் இருவரும் சரியாக சாட்சி அளிக்கமாட்டார்கள் என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது அம்மா மற்றும் அத்தை 1976ம் ஆண்டு வாங்கினார்கள். அப்போது எனக்கு 1 வயது ஆகும். எனக்கு 1 வயதாக இருககும் போது எனது அம்மாவும் அத்தையும் எவ்வளவு நீள அகலம் உள்ள சொத்தை வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. அந்த விவரம் பின்பு எனக்கு 10 வயது இருக்கும்போது தெரியவந்தது. எனது அம்மாவும் அத்தையும் கிரயம் வாங்கும்போது பிரதிவாதி அந்த இடத்தில் குடும்பம் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதி இருந்த இடத்திற்கு முன்புறம் இருந்த தெருபகுதி தான் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பின்பகுதியை பிரதிவாதி அனுபவித்து வருகிறார். முன்பகுதியை வாதி கிரயம் பெற்றிருக்கிறார், பின் பகுதிக்கு முன்பகுதியை கிரயம் வாங்கியவர்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் தென் பகுதியில் backyard உள்ளது என்று குறிப்பிட்டு தான் கிரயம் வாங்கியதாக எனக்கு தெரியும்.

பின்பகுதியில் புழக்கடை பாத்தியம் உள்ளதாக தெரியும். ஆவணங்களில் அவ்வாறு உள்ளதாக எனது தந்தை தெரிவித்தார். கிழக்கு மேற்கு 30 அடி வடக்கு தெற்கு 32 அடி நாராசம் 3 அடி உள்பட விஸ்தீரணம் ஆகும். நான் வாங்கிய கிரயம் நாராசம் உள்படி என்றால் சரிதான். நாராசம் உள்பட நான் கிரயம் பெற்றுள்ளதால் விருப்பம் இருந்தால் அல்லது விடவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அது பிரதிவாதிக்கும் பொருந்து் என்றாலும் அதனால் போக வர பின்புறத்தில் புழக்கடை பாத்தியம் உள்ளது என்று நான் தவறாக தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாய் மற்றும் அத்தை யாரிடம் இருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கினார்கள் என்றால் ராஜகோபாலு நாயுடு மகன்கள் ஸ்ரீராமுலு நாயுடு, ஜெயராம நாயுடு மற்றும் மோகனவள்ளி ஆகியோர்களிடமிருந்து கிரயம் வாங்கினார்கள். 1982ல் பிரதிவாதியும் வாதியும் ஒன்று சேர்ந்து வழக்கு சொத்துகளை பாகம் பிரித்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்கள் என்றால் எனக்கு தெரியும். பிரதிவாதியின் தந்தை வனசுந்தர முதலியார் ஆவார். அந்த 1982ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன் ஆனால் படிக்கவில்லை. அவ்வாறு பாகபிரிவினை செய்துகொண்டபோது பின்பக்கம் வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் சென்றுவர புழக்கடை பாத்தியமோ நாராசமோ உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை எதற்காக நடைபெற்றது என்றால் நாராசத்திற்கு முன் பகுதியில் கடை கிடையாது என்று பிரதிவாதி தெரிவித்ததால் அப்போது பிரச்சனை ஏற்பட்ட போது கடைக்காக பாகப்பிரிவினை ஏற்பட்டது. 1982 பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர நமக்குள் பிரித்துக்கொள்ள வேண்டிய வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்ற அதில் கண்டுள்ளது என்றால் அந்த சொத்தை பொறுத்த மட்டும் தான் பாகபிரிவினை பத்திரம் எழுதப்பட்டது. பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 1982ம் வருடமே சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டன என்றாலும் அது தவிர்த்து வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் பின்புறம் உள்ள இடத்திற்கு போக வர பாத்தியம் எங்களுக்கு உண்டு. தாவா வரைபடத்தில் கண்டுள்ள அளவுகள் நாங்களாகவே குறிப்பட்டுள்ளோம் என்றாலும் நகராட்சியில் இருந்து எந்த அத்தாட்சியும் பெற்று அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் பத்திரத்தில் கண்டுள்ள அளவுகளின் படி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். ( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

ஒ/ப.ஆர்.இராஜேஸ்வரி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
காஞ்சிபுரம்